இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள்மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

இச் சலுகைகள் வரும் செப்டம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—1970 அடிப்படைத் தேதியாக கொள்ளப்படும்.

தனிநபர்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச்சலுகைகளின் விளைவாக தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக் கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச்சலுகைகளை அனைவரும் வரவேற்றிடுவீர் என்றும், இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகிறேன். (ஆரவாரம்).

5. அரசுத் தீர்மானம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவுக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு திரு. மன்னை ப நாராயணசாமி: தலைவரவர்களே, “ தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருந்த திரு. பி. நாராயணசாமி தம் உறுப்பினர் பதவியை விட்டு விலகிவிட்டதால் ஏற்பட்டுள்ள காலியிடத்தை நிரப்புவதற்காக மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க, தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவு (2) உட்பிரிவில் “ பிரிவு II -பிற உறுப்பினர்கள்” எனும் தலைப்பின் கீழுள்ள (h) பகுதியின்படி முற்பட வேண்டும்”. என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்

1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன்புள்ள கேள்வி :

" தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருந்த திரு. பி. நாராயணசாமி தம் உறுப்பினர் பதவியை விட்டு விலகி விட்டதால் ஏற்பட்டுள்ள காலியிடத்தை நிரப்புவதற்காக மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க, தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவு (2) உட்பிரிவில் " பிரிவு II —பிற உறுப்பினர்கள் " எனும் தலைப்பின் கீழுள்ள (h) பகுதியின்படி முற்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினர் தெரிந்தெடுக்கப்படுவது தொடர்பாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தையொட்டி நான் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலை முடிவு செய்கிறேன் :

வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான நேரமும் நாளும்—21-8-1972 மாலை 4-30 மணி.

வேட்பு மனுக்களை ஆய்வு செய்யும் நேரமும் நாளும்—21-8-1972 மாலை 5 மணி.

வேட்டி மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்—22-8-1972 மாலை 4-30 மணி

வேட்பு மனுப் படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் நியமிக்கப் பட்டால், தேர்தல் நடைபெறும், ஒன்றை மாற்று வாக்கு மூலம் வீதாசார கொள்கைக்கிணங்க தேர்தல் நடைபெறாது; தேர்தல் சாதாரண முறைப்படி தான் நடைபெறும். தேர்தல் நடைபெற்றால், தேர்தலுக்கான நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப் படும்.